**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**

**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2026-ம் ஆண்டு மே திங்கள் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.47/2018**

**(CNR.NO:TNRM05-000194-2018)**

1. காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் : அரசுக்காக, காவல் ஆய்வாளர், பாம்பன் காவல் நிலையம், குற்ற எண்.105/2017

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சௌந்தர் ராஜ் |
| 3. | த/பெ | : | ஜான் காளிமுத்து |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சந்தியா நகர், தங்கச்சிமடம் |
| 6. | வயது | : | -- |

7. சம்பவ நாள் : 16.09.2017-ம் தேதி 21.00 மணி
8. புகார் தேதி : 17.09.2017-ம் தேதி 09.30 மணி
9. எதிரி கைது செய்யப்பட்ட நாள் : 17.09.2017
10. பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் : 17.09.2017 ம் தேதியன்று நிலையப் பிணையில் சென்றுள்ளார்.
11. கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 08.03.2018
12. விசாரணை துவங்கப்பட்ட நாள் : 06.02.2018
13. விசாரணை முடிவுற்ற நாள் : 22.05.2026
14. சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் : பிரிவு 304(A) இதச மற்றும் 192 MV Act படி
15. வினவப்பட்ட குற்றச்சாட்டுகள் : பிரிவு 304(A) இதச மற்றும் 192 MV Act படி

16. காலதாமதத்திற்கான காரணம் : சாட்சிகள் விசாரணைக்காக 06.02.2018 முதல் 09.11.2021 வரை நிலுவையிலிருந்தும், பின்பு எதிரி மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 19.12.2022 வரை நிலுவையில் இருந்தும், சாட்சிகள் விசாரணைக்காக 04.01.2023 முதல் 22.09.2023 வரை நிலுவையில் இருந்து வந்தும், பின்பு எதிரி மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 26.12.2024 வரை நிலுவையில் இருந்தும் காரணத்தினால் காலதாமதம்.

17. அரசு தரப்பு சாட்சிகள் :

| முதல் விசாரணை | எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |
|---|---|
| அ.சா.1 – 04.01.2023 | அ.சா.1 – 04.01.2023 |
| அ.சா.2 – 31.01.2023 | அ.சா.2 – 31.01.2023 |
| அ.சா.3 – 31.01.2023 | அ.சா.3 – 31.01.2023 |
| அ.சா.4 – 31.01.2023 | அ.சா.4 – 31.01.2023 |
| அ.சா.5 – 22.02.2023 | அ.சா.5 – 22.02.2023 |
| அ.சா.6 – 22.02.2023 | அ.சா.6 – 22.02.2023 |
| அ.சா.7 – 10.06.2025 | அ.சா.5 – 10.06.2025 |

18. எதிரியிடம் பிரிவு 313(i)(b) Crpc/ 351(i)(b) BNSS படி விசாரணை செய்யப்பட்ட நாள் : 03.07.2025

19. எதிரி தரப்பு சாட்சிகள் : இல்லை

20. எதிரி/குற்றமுறையிட்டாளார் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் : இல்லை

21. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் : இல்லை

22. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான : i) எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.5482/2022 ஆக

| | | | |
|---|---|---|---|
| | மனுக்கள் | | கோப்பிற்கு எடுக்கப்பட்டு 19.12.2022ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>ii) எதிரி தரப்பில் 70(2) Crpc பிரிவின் படியான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்ற Crl.M.P.No.7106/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.12.2024ம் தேதி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.மணிசங்கர் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.R.ஜோதிமுருகன் |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 29.05.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 29.05.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக எதிரி பிரிவுகள் 304(A) இதச மற்றும் 192 MV Actன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.** |

இவ்வழக்கு 08.03.2018ம் தேதியன்று குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் (இனி கீழ் வரும் இடங்களில் குவிமுச என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில்

வழக்கறிஞர் திரு.R.ஜோதிமுருகன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்புரை**</u>

**1.<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:**

கடந்த 16.09.2017 ம் தேதி இரவு 09.00 மணியளவில் இந்த வழக்கின் இறந்து போன நபரான தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டிணத்தைச் சேர்ந்த அந்தோணி சந்தியா மகன் அடைக்கலம் என்பவர் முன்னர் நடந்து செல்ல அவரைத் தொடர்ந்து புகார்தாரரும் மற்றும் புகார்தாரரின் நண்பரான உயிர்த்தநாதன் என்பவரும் பாம்பன் அக்காள் மடம் புனித அன்னாள் பள்ளி எதிரே உள்ள NH 49 சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து போய் கொண்டிருக்கும் போது முன்னால் நடந்து சென்ற புகார்தாரரரின் தந்தையான அடைக்கலம் என்பவர் மீது பின்னால் அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும் 407 Van – TN 48 Q 8679 வாகனத்தை ஓட்டி வந்த எதிரி அடைக்கலம் என்பவர் மீது மோதி இறப்பு ஏற்படுத்தியும், மேலும் அனுமதியில்லாமல் வாகனம் ஓட்டியும் குற்றம்புரிந்ததாக எதிரி மீது பிரிவுகள். 304(A) இதச மற்றும் 192 MV Act படி பாம்பன் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு பிரிவு 204 குவிமுச கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது பிரிவு 251 குவிமுச படி பிரிவு பிரிவு 304(A) இதச மற்றும் 192 MV Act படி குற்றச்சாட்டு குறித்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 254(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி, அ.சா.3, அ.சா.4 கேள்வியுற்ற சாட்சிகள், அ.சா.5, அ.சா.6 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.7 புலன் விசாரணை அதிகாரி. மற்ற சாட்சிகள் அரசுத்தரப்பில் விசாரிக்கப்படவில்லை.

5. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:</u>**

அ.சா.1 கிரின்சன் தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டிணத்தில் வசித்து வருவதாகவும், மீன்பிடி தொழில் செய்து வருவதாகவும், வழக்கில் இறந்துபோன அடைக்களம் தனது அப்பா எனவும், ஆஜர் எதிரியை தான் பார்த்தது இல்லை எனவும், கடந்த 16.09.2017–ம் தேதி இரவு 09.00 மணிக்கு அக்காள்மடம் புனித அன்னாள் பள்ளி அருகில் தனது சித்தப்பா வீட்டில் நடந்த விசேசத்திற்கு கலந்துகொண்டபோது தனது அப்பா சுருட்டு வாங்குவதற்காக வெளியில் வந்துவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்துகொண்டிருந்ததாகவும், பின்னர் தனது அப்பாவை காணவில்லை தன்று தானும், தனது நண்பர் உயிர்த்தநாதன் என்பவரும் தேடி சென்றபோது தன் அப்பா தூரத்தில் சென்றுகொண்டிருந்ததாகவும், அப்போது ஒரு வேன் வேகமாக மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றது எனவும், ஹாரன் எதுவும் அடிக்காமல் அதிகவேகமாக சென்று தனது அப்பாவை தூக்கி எறிந்துவிட்டு

சென்றுவிட்டதாகவும், துாரத்தில் இருந்ததால் தங்களுக்கு சரியாக தெரியவில்லை எனவும், பின்னர் தானும், தனது நண்பரும் அருகில் சென்று பார்த்போது தன் அப்பாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அவ்வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் எனவும், அங்கு மருத்துவர் பரிசோதித்துவிட்டு தன் அப்பா இறந்துவிட்டதாக கூறியதாகவும், தன் அப்பாவின் மீது மோதிய  வாகனம் வேன் தான் என்று தெரியும் எனவும், அந்த வாகனத்தின் பெயரை குறிப்பிட்டு தன்னால் சொல்ல இயலாது எனவும், பின்னர் பாம்பன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது அது அ.சா.ஆ.1 எனவும், போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 அந்தோணி பிரபு  தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் சூசையப்பர்பட்டிணத்தில் வசித்து வருவதாகவும், ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் எனவும், ஆஜர் எதிரியை தான் பார்த்தது இல்லை எனவும், கடந்த 16.09.2017-ம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் அக்காள்மடம் செயின்ட் அன்னால் பள்ளிக்கு அருகே தான் சவாரி இறக்கிவிட்டு ஆட்டோவில் வந்து கொண்டிருந்தபோது  அ.சா.1 தன் அப்பா அடிபட்டு காயத்துடன் இருந்தவரை தனது ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவைத்தார்கள் எனவும், தான் அவரை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை கொண்டு போய் சேர்த்தாகவும், அவருக்கு தலையில் காயம் இருந்தது எனவும், போலீசார் தன்னை விசாரித்ததாக  சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 சேசம்மாள் தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் சூசையப்பர்பட்டிணயத்தில் வசித்து வருவதாகவும், கருவாட்டு வியாபாரம்  செய்து வருவதாகவும், அ.சா.1 தனது மகன் எனவும்,  வழக்கில் இறந்துபோன அடைக்களம் தனது கணவர் எனவும், கடந்த 16.09.2017-ம் தேதி இரவு 09.00 மணிக்கு தன் மகன்

அ.சா.1 தனக்கு போன் மூலம் தன் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும், அதன்பேரில் தான் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சென்று பார்த்ததாகவும், அப்போது தன் கணவர் இறந்துவிட்டார் எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 பாக்கியராஜ் தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் சூசையப்பர்பட்டிணத்தில் வசித்து வருவதாகவும், ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் எனவும், கடந்த 16.09.2017–ம் தேதி இரவு 09.00 மணிக்கு அ.சா.3 தன்னை அழைத்ததன் பேரில் அ.சா.3 ஐ ஆட்டோவில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இறக்கிவிட்டதாகவும், அ.சா.3 ன் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக அ.சா.3 கூறியதாகவும், பின்னர் அவரது கணவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 ரைமண்ட் தனது சாட்சியத்தில் தான் அக்காள்மடத்தில் வசித்து வருவதாகவும், மீன்பிடி தொழில்செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது எனவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னடையது எனவும், அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ– 2 எனவும். கடந்த 17.09.2017–ம் தேதி காலை சுமார் 10 அல்லது 10.30 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து காவல் ஆய்வாளர் வந்து தன்னிடமும், புனிதன் என்பவரிடமும் சாட்சியாக கையொப்பம் வாங்கியதாகவும், காவல் ஆய்வாளர் அங்கு வந்து வரைபடம் வரைந்து விசாரணை செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 புனிதன் தனது சாட்சியத்தில் தான் அக்காள்மடத்தில் வசித்து வருவதாகவும், மீன்பிடி தொழில்செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது. தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது எனவும், அந்த பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 எனவும், கடந்த 17.09.2017—ம் தேதி காலை 10 மணிக்கு அக்காள்மடம் பஸ் ஸ்டாப் முன்பு வைத்து பாம்பன் காவல் ஆய்வாளர் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் தானும், ரைமன்ட் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 மாயாராஜலட்சுமி தனது சாட்சியத்தில் தான் தற்சமயம் காவல் ஆய்வாளராக தேனி குற்றப்பிரிவில் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17.09.2017 ம் தேதியன் பாம்பன் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது 09.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இந்திரன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது கிரின்சன், த/பெ.அடைக்கலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.105/2017 பிரிவு.304(A) இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இந்திரன் தற்போது இறந்துவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் மேற்சொன்ன சாட்சியத்தை அளித்ததாகவும், புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளதாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 எனவும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை தான் அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரெய்மண்ட், புனிதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளதாகவும், பார்வை

மகஜர் அ.சா.ஆ.5 எனவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 எனவும், பின்பு சாட்சிகள் கிரின்சன், உயிர்த்தநாதன், ஆண்டனி பிரபு, சேசம்மாள், பாக்கியராஜ், ரெய்மண்ட், புனிதன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும், பின்பு 17.09.2017 ம் தேதி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சென்று இறந்த அடைக்கலம் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 7 எனவும்,பின்பு காவலர் த.கா.1821 திரு.முனியசாமி என்பவர் மூலமாக பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக அனுப்பி வைத்ததாகவும், பின்னர் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவர்கள் குடும்பத்தாரிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தாகவும், பின்னர் 17.09.2017 ம் தேதி 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை அக்காள்மடம் பஸ்ஸ்டாப் அருகே கைது செய்து நிலையம் கொண்டுவந்து நிலையப்பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் 21.09.2017 ம் தேதி இவ்வழக்கில் எதிரியின் வாகனமான TN 48 Q 8679 என்ற வேனை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஸ்வநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றதாகவும், அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 எனவும், இவ்வழக்கில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் மீனாகுமாரி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பதிவேடு பெற்றதாகவும், அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.9 எனவும், பின்பு சிறப்பு உதவி ஆய்வாளர் இந்திரன் என்பவரை 11.01.2018 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரியின் மீது 11.01.2018 ம் தேதியன்று சட்டப்பிரிவுகள். 304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**Questioning U/s.313(i)(b) Crpc**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ளவை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் இந்த வழக்கில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கவில்லை.

**Point for determination**

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட பிரிவுகள். 304(A) இதச மற்றும் 192 MV Act படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

**இருதரப்பு வாதங்கள்**

8. அரசுத்தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் அ.சா.1 சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதனை ஆதரித்து அ.சா.2 முதல் அ.சா.7 வரையானவர்கள் சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்சொன்னவர்கள் மூலம் வழக்கு சம்பவம் தொடர்பாக அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக வாதம் சமர்பிக்கப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 மூலமாக புகார் கொடுக்கப்பட்டது நிரூபிக்கப்படவில்லை. அ.சா.1 எதிரியின் வாகனம் மற்றும் எதிரியை அடையாளம் காட்டி சம்பவ தினத்தன்று எதிரி தான்

வாகனத்தை அஜாக்கிரதையாக இயக்கினார் என்று எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான உயிர்த்தநாதன் விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.5 வரையானவர்கள் சம்பவத்தைப் பொறுத்து கேள்வியுற்ற சாட்சிகள். அ.சா.7 சாட்சியத்தின் மூலமாக மட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டு குறித்து தீர்மானிக்க இயலாது என்றும், மேற்சொன்ன குறைபாடுகளின் பலன்களையும், சந்தேகத்தின் காரணமாக எழும் பலன்களையும் எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

## Appreciation of Evidence

10. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கிரின்சன் என்பவர் தனது முதல் விசாரணையில் 16.09.2017 ம் தேதி இரவு 09.00 மணியளவில் அக்காள்மடம் புனித அன்னாள் மடம் பள்ளி அருகே ஒரு வேன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஹாரன் அடிக்காமல் சென்று அதிவேகமாக தனது அப்பா மீது மோதி தூக்கி எறிந்து விட்டு சென்றதாகவும், துூரத்தில் இருந்ததால் தங்களுக்கு சரியாக தெரியவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.1 புகார் மனு உறுதியூட்டப்பட்டுள்ளது. அ.சா.1 குறுக்கு விசாரணையில் புகார் மனுவை தான் எழுதவில்லை என்றும், தனது சித்தப்பா எழுதிக் கொடுத்த புகாரில் தனக்கு எழுத, படிக்கத் தெரியாத காரணத்தினால் கையெழுத்து மட்டும் போட்டதாக சாட்சியமளித்துள்ளார். இதன்மூலம் புகாரிலுள்ள சங்கதிகள் அ.சா.1 ஆல் எழுதப்படவில்லை என்பது தெளிவாகிறது. இருப்பினும் அ.சா.1 சம்பவம் நடைபெற்ற விதம் குறித்து புகார் மனுவை ஒத்திசைந்து சாட்சியமளித்துள்ளார். எனவே, எதிரித் தரப்பில் முன்னிடப்பட்ட புகார் அ.சா.1 ஆல் எழுதப்படவில்லை என்ற வாதம் ஏற்புடையதல்ல. புகார் மனுவிலுள்ள சங்கதிகள் அவர் கூறியதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான வழக்கு பட்டியல் சாட்சி 2 உயிர்த்தநாதன் என்பவர் விசாரிக்கப்படவில்லை. அ.சா.2 அந்தோணி பிரபு என்பவர் விபத்திற்கு பிறகு அ.சா.1–ன் தந்தையை அரசு மருத்துவமனைக்கு தலையில் காயத்துடன் அழைத்துச் சென்றது தொடர்பாகவே சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 சேசம்மாள் தனது கணவருக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக தனது மகன் அ.சா.1 போன் மூலமாக கூறி அதனடிப்படையில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்குச் சென்றதாகவே சாட்சியமளித்துள்ளார். எனவே, விபத்து தொடர்பாக அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்கள் மூலமாக எதுவும் முன்னிடப்படவில்லை. எனவே, இவ்வழக்கின் அ.சா.1–ன் சாட்சியம் மூலமாகவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலும். அ.சா.1 தனது முதல் மற்றும் குறுக்கு விசாரணையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் அல்லது Model அல்லது விபத்து ஏற்படுத்திய நபர் தொடர்பாகவோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், அவர் குறுக்கு விசாரணையின் போது தனது தகப்பனார் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் அவரது கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அப்போது அரசுத்தரப்பு வழக்கறிஞர் அ.சா.1 வாகனம் அதிவேகமாக வந்ததை கூறியதை பதிவு செய்யவேண்டுமென்று இந்நீதிமன்றத்தால் சாட்சியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 தனது முதல்விசாரணையிலும் அதிவேகமாக ஒலி எழுப்பாமல் அந்த வேன் சென்றதாகவே சாட்சியமளித்துள்ளார்.

12. எனவே, அந்த வேன் அதிவேகமாக ஹாரன் அடிக்காமல் சென்றதாக முன்னிடப்பட்டது போல் பிரிவு.304(A) இதசவின் கீழ் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு என்ற வரையறைக்குள் வருகிறதா என்று தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வழக்கில் சம்பவ இடமானது தேசிய நெடுஞ்சாலை எண்.49–ல் இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் சாலையில் அக்காள்மடம் புனித

அன்னாள் பள்ளி எதிரே நடைபெற்றதாக வழக்காவணங்கள் அமையப் பெற்றுள்ளது. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் கிறிஸ்தவ சுடுகாடு என்பதும், புனித அன்னாள்பள்ளி என்பதும் வேறு, வேறு பகுதிகள் என்றும், புனித அன்னாள் பள்ளிக்கு முன்பு சம்பவம் நடக்கவில்லையென்று ஒப்புக்கொண்டுள்ளார். பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.5 ரைமண்ட் மற்றும் அ.சா.6 புனிதன் ஆகியோர்களது சாட்சியம் மூலமாகவும் விபத்து நடந்த இடமானது புனித அன்னாள் பள்ளி எதிரே அமையப்பெற்றுள்ளதாக தெளிவான நம்பத்தகுந்த வகையிலான சாட்சியங்கள் பெறப்படவில்லை. எனவே, சம்பவ இடமானது புனித அன்னாள் பள்ளி எதிரே அமையப்பெற்றுள்ளது என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை.

13. மேலும், புகார் மற்றும் போலீசார் விசாரணை வாக்குமூலங்களில் இறந்து போன அ.சா.1ன் தந்தை ரோட்டின் எந்த பக்கத்தில் நடந்து சென்றார் என்பது குறித்து பதிவுகள் இல்லாத நிலையில் அ.சா.1 மூலமாகவும் அவர் ரோட்டின் எந்த பகுதியில் நடந்து சென்றார் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரவில்லை. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 மாயராஜலெட்சுமி என்பவர் தேசிய நெடுஞ்சாலையில் ரோட்டின் எந்தப் பகுதியில் நடந்து சென்றார் என்று குறிப்பிடவில்லை என்றும், விபத்து ஏற்படுத்திய வாகனம் சரியான பாதையில் சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அ.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தை பரிசீலனை செய்கையில் சம்பவ இடமானது கிறிஸ்தவ சுடுகாடு எதிரே ரோட்டின் மையப்பகுதிக்கு இடதுபுறம் குறிப்பிடப்பட்டு பின்னர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு புனித அன்னாள் பள்ளியிலிருந்து சிறிது கிழக்கு திசையில் தள்ளி ரோட்டின் மையப்பகுதிக்கு அருகே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1–ன் தந்தை ரோட்டின் இடதுபுறம் நடந்து செல்லும்போது விபத்து ஏற்பட்டதாகவும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரவில்லை.

மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை **சுப்புராம் எதிர் காவல் ஆய்வாளர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் CRL.R.C. (MD).No.89/2018** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் **State of Karnataka vs. Sathish (1998) 8 SCC 49** என்ற வழக்கில்:–

"*வாகனத்தை வேகமாக இயக்குவது என்பது கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரரையை உள்ளடக்கியது என்பது தொடர்பாக அரசுத்தரப்பில் தகுந்த சாட்சியங்கள் முன்னிடப்படாத பட்சத்தில் வேகமாக இயக்கிய காரணத்தினால் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக வாகனம் இயக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது*" என்று தீர்மானிக்கப்பட்டதை மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மேற்சொன்ன தீர்ப்பானது இவ்வழக்கு சூழ்நிலைகள் மற்றும் சங்கதிகளுடன் ஒத்திசைந்து அமையப்பெற்றுள்ளது. பல்வேறு உச்சநீதிமன்ற தீர்ப்புகளில் அதிவேகமாக வாகனம் இயக்கப்பட்டது என்ற காரணத்தினால் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக வாகனம் இயக்கப்பட்டதாக தீர்மானிக்க இயலாது என்று முன்மொழியப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் பொதுவாக வாகனங்கள் வேகமாகச் செல்வது இயல்பானதாகும். இவ்வழக்கில் அவ்வாறான விபத்து ஏற்படுத்தியதாக முன்னிடப்படும் வேனின் வேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு என்ற வரையறைக்குள் வருவதாக இந்நீதிமன்றத்தில் தெளிவான சாட்சியங்கள் முன்னிடப்பவில்லை.

14. எனவே, கண்ணுற்ற சாட்சியான அ.சா.1–ன் மூலமாக ஆஜர் எதிரி தான் TN 48 Q 8679 என்ற 407 வேனை இயக்கினார் என்பதும், அவர் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக வேனை இயக்கிதான் அடைக்கலம் என்பவர் மீது மோதி அவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலவில்லை. இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 மாயராஜலெட்சுமி என்பவர் தனது முதல்விசாரணையில் விபத்து ஏற்பட்டதற்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட

புலன்விசாரணை மற்றும் பெறப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 தனது முதல்விசாரணையில் எதிரியின் மீது 304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அ.சா.7 சம்பவ தினத்தில் எவ்வகையான வாகனங்கள் பாம்பன் அக்காள்மடத்தில் செல்ல அனுமதியளிக்கப்பட்டிருந்தது என்பது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அவரது சாட்சியம் மூலமாக 16.09.2017 ம் தேதியன்று இரவு 09.00 மணிக்கு பாம்பன் அக்காள்மடம் புனித அன்னாள் பள்ளி அருகே எதிரி அனுமதியில்லாமல் வேனை இயக்கியதாகவோ, அதன் மூலமாக பிரிவு.192 மோட்டார் வாகனச் சட்டத்தின் படி குற்றம்புரிந்ததாகவும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வரவில்லை.

15. எனவே, அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சியங்கள் மூலமாக கடந்த 16.09.2017 ம் தேதி இரவு 09.00 மணிக்கு இந்த வழக்கின் புகார்தாரரின் தந்தையான அடைக்கலம் என்பவர் பாம்பன் அக்காள்டம் புனித அன்னாள் பள்ளி எதிரே மேற்கில் இருந்து கிழக்காக ரோட்டில் நடந்து சென்றபோது, அவருக்கு பின்னால் TN 48 Q 8679 என்ற 407 வேனை ஓட்டி வந்த எதிரி அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி அடைக்கலம் என்பவர் மீது மோதியதில் அவருக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டு அடைக்கலத்திற்கு இறப்பை ஏற்படுத்தியதன் மூலமாக பிரிவு.304(A) இதசன் கீழும் குற்றம்புரிந்ததாகவும், அனுமதியின்றி வாகனத்தை இயக்கியதன் மூலமாக பிரிவு.192 மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான குற்றம்புரிந்ததாகவும், தகுந்த சாட்சியங்கள் மூலம் அரசுத்தரப்பில் முன்னிடப்படாத சூழ்நிலையில் புலன் விசாரனை அதிகாரியான திருமதி.மாயராஜலெட்சுமி என்பவரது சாட்சியம் மூலமாக எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை புரிந்ததாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான பிரிவு 304(A) இதசவின் கீழ் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16. முடிவாக எதிரி பிரிவுகள் 304(A) இதச மற்றும் 192 MV Act ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. குற்றம்சாட்டப்பட்டவர் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

18. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் 17.09.2017 ம் தேதி கைது செய்யப்பட்டு அன்றைய தினமே நிலைய பிணையில் சென்றுள்ளார்.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 29 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.05.29 17:43:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

i) **<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | – | கிரின்சன் | புகார்தாரர் |
| அ.சா.2 | – | அந்தோணி பிரபு | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | – | சேசம்மாள் | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.4 | – | பாக்கியராஜ் | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.5 | – | ரைமண்ட் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | – | புனிதன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | – | மாயராஜலெட்சுமி | புலன்விசாரணை அதிகாரி |

**(ii) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17.09.2017 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 17.09.2017 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 17.09.2017 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 17.09.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 17.09.2017 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 17.09.2017 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 17.09.2017 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 21.09.2017 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | 17.09.2017 | பிரேத பரிசோதனை சான்று |

**<u>Iii) குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை

**<u>iv) சான்றுப்பொருள்:</u>**

இல்லை

**<u>குறிப்பு:</u>**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.05.29 17:43:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.